**தலைப்பு 219 – விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 10 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/19 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும்

மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவுத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்குரிய 9 இடங்களின் விளையாட்டரங்குகளும் விடுதிகளும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் இச்சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இச்சொத்துக்களை உரிய சொத்துப் பதிவேடுகளில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாத்தறை கொடவில விளயாட்டரங்கினதும் களுத்துறை பண்டாரகம மாவட்ட விளையாட்டுத் தொகுதி அமைந்துள்ள காணிகளின் உரித்தையும் பொலன்னருவ மாவட்ட விளையாட்டுத் தொகுதி அமைந்துள்ள காணிகளின் உரித்தையும் கையேற்பதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திணைக்களம அமைந்துள்ள 04 காணிகளை திணைக்களத்திற்கு கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு திம்பிரிபகஸ்யாய பிரதேச செயலகத்தினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே பெலிஅத்த விளையாட்டரங்கை பெலிஅத்த பிரதேச சபைக்கு கையளிப்பதற்கு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளருக்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்க கட்டளை 7(x) மற்றும் 7(xii) | தேசிய விளையாட்டுச் சங்கத்தினால் அடுத்த ஆண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்து அச் செயல்நடவடிக்கைத் திட்டத்தை நடப்பாண்டு | தேசிய விளையாட்டுச் சங்க கட்டளையின் பிரகாரம் விளையாட்டுச் சங்கங்களின் வருடாந்த செயல் | நிதிஏற்பாடுகளை வழங்கும் போது குறித்த தேசிய சங்கம் / சம்மேளனத்தினால் சமர்ப்பிக்கப்படும் செலவின மதிப்பீடு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முடிவடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2019 ஆம் ஆண்டிற்காக தேசிய விளையாட்டுச் சங்கங்களின் செயல்நடவடிக்கைத் திட்டத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைத் திட்டத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட்டு கௌரவ விளையாட்டு அமைச்சர், அமைச்சின் செயலாளர் அல்லது விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு இந்நிதி ஏற்பாடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்க கட்டளை 7(x) | விளையாட்டு சங்கங்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளுக்கு வருவதற்கு நடவடிக்கை எடுக்காமல் விமான பிரயாணச் சீட்டுக்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு உட்பட செலவினங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 204,001,938 35 சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. | தேசிய விளையாட்டுச் சங்க கட்டளையின் பிரகாரம் விளையாட்டுச் சங்கங்களுக்காக நிதி உதவிகள் வழங்கும் போது புரிந்தணர்வு உடன்படிக்கைக்கு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | இது தொடர்பாக எதிர்காலத்தில் முறையான வேலத்திட்டமொன்று தயாரித்து செயற்படுத்துவதற்கு பணிப்பாளர் நாயகத்தினால் தற்போது பணிப்பாளர் (விளையாட்டுக்கள்) இற்க ஆலோசணை வழங்கியுள்ளதாகவும் அதன் பிரகாரம் எதிர்வரும் காலங்களில் அனைத்து விளையாட்டுச் சங்கங்கள் / சம்மேளனங்கள் அறிவுறுத்தப்பட்டு இக்குறைபாடுகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். |
| (இ) | 2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்க கட்டளை இலக்கம் 7(vi)ஆம் பந்தி | (i) சர்வதேச விளையாட்டுச் சம்மேளனத்தினால் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்ட தெரிவு செய்தல் நியதிகளை முறையாக கருத்திற் கொண்டு வீரர்களை | தேசிய தெரிவுக் குழுவிற்காக தேசிய விளையாட்டுச் சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட தெரிவு நியதிகள் | விளையாட்டு நிகழ்ச்சிகளுககாக வீர வீராங்கனைகளைத் தெரிவு செய்யும் போது ஏதேனும் ஒருவகையில் |

| | | | |
|---|---|---|---|
| | தெரிவு செய்வதற்காகவும் பணிப்பாளர் நாயகததின் கூட்டிணைப்புடன் சர்வதேச ரீதியில் அல்லது பிராந்திய விளையாட்டு நிகழ்ச்சிகளை பிரதி நிதித்துவப்படுத்துவதற்காக அணியொன்றை தெரிவு செய்யும் போது வெளிப்படையான தெரிவு நியதிகளைத் தயாரித்தல் தேசிய விளையாட்டுச் சங்கத்தினால் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டற்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிககப்படவில்லை. மேலும் நியதிகளை தயாரிப்பதற்காக திணைக்களத்தினால் விளையாட்டுச் சங்கங்களின் செயற்பாடுகளைப் பரீட்சித்து அந்நடவடிக்கைளை செயற்படுத்துவதற்கு அல்லது கண்காணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்துள்ளமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை | தொடர்பாக கூட்டிணைப்பு செயற்பாடுகள மேற்கொள்ளல், அறிக்கை சேகரித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தம் செயற்பாடுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும். | அசாதாரணமொன்று நிகழ்ந்தால் அந்தந்த விளையாட்டு சங்கங்கள் / சம்மேளனங்கள் மேற்பார்வை உத்தியோகத்தர்கள் அந்த அசாதாரணம் தொடர்பாக விடயங்களை ஆராய்ந்து அதற்காக எடுத்து உரிய வகையில் நடவடிக்கை எடுப்பதால் விளையாட்டுச் சங்கங்கள்/ சம்ளேனங்களின் செயற்பாடுகள் பரீட்சிக்கப்பட்டு வழகாட்டலை மேற்பார்வை செய்வதால் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. |
| (ii) | 2017 ஆம் ஆண்டிற்காக 37 தேசிய சங்கங்கள், 2018 ஆம் ஆண்டிற்காக 25 தேசிய சங்கங்கள் 2019 ஆம் ஆண்டிற்காக 35 தேசிய சங்கங்கள் தேசிய தெரிவுக் குழுவினை நியமிக்காமல் இருந்த போதும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளுக்கு பங்குபற்றுவதற்காக விமானச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்காகவும் | உள்நாட்டு மற்றும் சர்வதேச போட்டிகளுக்காக வீரர்களைத் தெரிவு செய்வதற்காக வருடாந்த தெரிவுக் குழுக்களை நியமித்தல், அதன் செயற்பாடுகளை கணகாணித்தல், வழிநடாத்துதல் மற்றம் ஒழுங்குபடுத்துவதினூடாக திணைக்களத்தின் | சகல வடயங்களையும் கருத்திற் கொண்டு இதன் பிறகு இவ்வாறான குறைபாடுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். |

| | | |
|---|---|---|
| | போட்டிகளை நடாத்துவதற்கான செலவினமாகவும் 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 33,028,040, ரூபா 1,023,330 மற்றும் ரூபா 17,700,623 தொகை விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் அந்த தேசிய சங்கங்களுக்காக செலவிடப்பட்டிருந்தன. | தகைமையுடைய வீர வீராங்கணை களுக்காக பயன் படுத்தப்படுவாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்காக திணைக்களம் தயாரித்திருந்த கட்டுநிதி மதிப்பீட்டின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட மற்றும் விண்ணபிக்கப்பட்ட ரூபா 4,832,159,000 ஆக இருந்ததுடன், அதற்காக திறைசேரியிடமிருந்து ரூபா 1,824,270,000 ஆன கட்டுநிதி கிடைக்கப் பெற்றிருந்தது. இதன் பிரகாரம் உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற செயற்பாடுகளை முறையாக நிறைவேற்ற முடியாமல் போயிருந்தது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் கட்டுநிதியை பெற்றுக் கொண்டு குறித்த செயற்பாடுகளை பூர்த்தி செய்ய வேண்டும். | தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய பொது விளையாட்டு விழா என்பன 2019 ஆம் ஆண்டின் இறுதியில் நடாத்தப்பட்டதுடன் அது வருட ஆரம்பத்தில் அல்லது நடுப்பகுதியில் நடாத்துவதற்கு முடியவில்லை. ஆண்டின் ஆரம்பத்திலிருந்து கட்டுநிதி எம்மால் கோரப்பட்ட போதும் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் கிடைக்கவில்லை. |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | திணைக்களத்தின் மூலதன செலவின விடயடிமான்றுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,461,000,000 ஆன தேறிய செலவின நிதிஏற்பாட்டில் ரூபா 280,407,661 அல்லது 19 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஆரம்பிக்கும் காலப்பகுதியை திட்ட வட்டமாக தீர்மானித்து ஆண்டின் போது நிறைவேற்றப்பட செயற்பாடு களின் அளவிற்கு பொருந்தும் வகையில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். | செயற்திட்டங்களை செயற்படுத்திய போதும் தேவையான பிரகாரம் கட்டுநிதி கிடைக்காமையால் ரூபா 538 மில்லியன் செலுத்த வேண்டிய பட்டியல் 2019.12.31 இல் திணைக்களத்திடம் காணப்பட்டது. |
| (ஆ) | 13 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக மிகை நிதி மேற்கொள்ளப் பட்டதால் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் அச்செலவின விடயங்களில் சேமிப்புக்கள் செலவின விடயங்களுக்கான தேறிய நிதிஏற்பாட்டின் 25 சதவீதம் முதல் 97 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடு தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 2019/04 இன் பிரகாரம் சில செலவின விடயங்களில் செலவினத்தை மேற்கொள்வது மட்டுப்படுத்தப்பட்டதன் மூலம் செலவினம் முகாமை செய்யப்பட்டதால் இசசெலவின விடயங்களில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டின் ஒரு செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 600,000,000 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 578,719,272 தொகை | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 02(ஈ) ஆம் பந்திக்கு இணங்க கடப்பாடுகளுக்கும் | நேபாளத்தில் நடைபெற்ற 13 ஆவது தெற்காசிய விளையாட்டு விழாவிற்காக ஏற்படுத்தப்பட்ட கடப்பாட்டிற்காக ரூபா 49,936,273 ஆன தேறிய ஏற்பாடு மிகைத்திருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 21,280,727 சேமிக்கப்பட்டிருந்த போதும்அச்சேமிப்பினை மிகைத்து ரூபா 49,936,273 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | பொறுப்புக்களுக்கும் போட்டிகள் உட்பட வேண்டும். | |
| (ஆ) | ஒவ்வொரு செலவின விடயத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டிருந்த ரூபா 32,401,954 ஆன பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாமல் இருந்ததுடன் கணக்கு தீர்ப்பனவிற்காக பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் அப்பொறுப்புக்களிலிருந்து ரூபா 20,544,471 கொடுப்பனவிற்காக பரிந்துரை செய்யப்பட்டிருக்க வில்லை. | பொறுப்புக்கள் முறையாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்கு தீர்ப்பனவிற்காக பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் அத் தொகையில் ரூபா 20.5 மில்லியன் தொகையான பட்டியலொன்று தாமதமாக சமர்ப்பித்த காரணத்தினால் கொடுப்பனவு செய்யாமை காரணமாக பரிந்துரைக்கப்பட்டிந்தது. அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | வழங்குனர் நிறுவனமொன்றுக்கு செலுத்த வேண்டிய ரூபா 7,152,080 தொகையான பொறுப்புக்கள 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | 2019.12.31 இல் குறித்த நிறுவனத்தினால் முற்பணம் மாத்திரம் கோரப்பட்டிருந்ததுடன் வழங்கல் பூர்த்தி செய்யப் பட்டிருக்கவில்லை. |

## 2.4 வைப்புக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 29,020,437 கூட்டுத் தொகையான 36 வைப்பு மீதிகள் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வைப்புக்களை விடுவப்பதற்காக போதிய கட்டுநிதி கிடைக்காமல் இருந்ததுடன் கட்டுநிதி கிடைத்தவுடன் உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.5 அரச உத்தியோகத்தர்களின் முற்பண இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 100,250 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகள் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | அறவிட முடியாதுள்ளது. திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்துடன் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 திசெம்பர் 23 ஆந் திகதி களஞ்சியத்திற்கு பொறுப்பேற்கப்பட்டிருந்த ரூபா 12,995,000 பெறுமதியான பாரந்தூக்கம் இலத்திரனியல் தீர்வு சமிக்ஞை முறைமை உபகரணம் கட்டளையிடும் போது ஏற்பட்ட தவறொன்றினால் வழங்குனர் நிறுவனம் அத்தியவசிய உருப்படியொன்றை வழங்காமையால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்தது. அந்த உபகரணங்கள் 4 நாட்களுக்காக ரூபா 220,000 தொகைக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டு போட்டி நடுவர் செயற்பாட்டிற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | அரசிற்கு சொந்தமான சொத்துக்கள் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்த வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் இந்த உபகரணங்களை கொள்வனவு செய்யும் போர்து அதற்காக தேவையான ‘ கொள்வனவு செய்யப்படாமையால் அதனை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டு பயன்படுத்தப்படுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்திற்குரிய வேன் வண்டியொன்று விளையாட்டு அமைச்சின் ஊடகப் பிரிவிற்கு 2019 சனவரி 21 ஆ ந் திகதி தற்காலிகமாக விடுவிக்கப்பட்டிருந்த போதும் 2020 ஒக்தோபர் மாதம் வரையிலும் திணைக்களத்திற்கு பெற்றக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. . | திணைக்களத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் தடையொன்று ஏற்படாமல் அச்சொத்துக்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த வேன் வண்டி அமைச்சின் ஊடகப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் விடுவிக்க முடியாதென அமைச்சின் செயலாளரால் 2020.01.17 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது |
| (இ) | விளையாட்டுத்தறை அமைச்சிற்குரிய ஜீப் வண்டியொன்று 2015 ஆம் ஆண்டு முதல் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | வெளித்தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பொருட்களை முறையாக திணைக்களத்திற்கு கையேற்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பணிப்பாளர் நாயகத்தின் பயன்பாட்டிற்காக திணைக்களத்தில் பொருத்தமான வாகனமொன்று இல்லாமையால் 2015 ஆம் ஆண்டு முதல் விளையாட்டு விளையாட்டுத்தறை அமைச்சிற்குரிய ஜீப் வண்டியொன்று திணைக்களத்தின் பயன்பாட்டிற்காக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. |

## 3.2 மாகாண மற்றும் விளையாட்டு அபிவிருத்தி தொகுதிகள் நிர்மாணம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண மற்றும் மாவட்ட விளையாட்டு தொகுதி நிர்மாணத்தின் கீழ் 12 மாவட்ட விளையாட்டு தொகுதிகள் மற்றும் 5 மாகாண விளையாட்டு தொகுதிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 675 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 12 மாவட்ட விளையாட்டு தொகுதிகள் மற்றும் 5 மாகாண விளையாட்டு தொகுதிகளை நிர்மாண செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 125 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதில் 03 மாவட்ட விளையாட்டு தொகுதிகளின் வேலைகள் பூர்த்தி | நிர்மாணிப்பதற்காக திட்டமிட்ட காலப்பகுதியில் சரியாக திட்டமிடப்பட செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக நிர்மாண வேலைகள் கண்காணிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். | 04 மாவட்ட விளையாட்டு தொகுதிகள் 2021 ஆம் ஆண்டின் நிதிஏற்பாட்டில் பேரில் வேலை பூர்த்தி பூர்த்தி செய்வதற்கு உள்ளது. 03 மாவட்ட விளையாட்டுத் தொகுதிகளின் வேலைகள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்ததுடன் 9 மாவட்ட விளையாட்டு தொகுதிகள் மற்றும் 5 மாகாண விளையாட்டு தொகுதிகளின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 15 மாவட்டங்களில் 52 விளையாட்டு அரங்குகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 475 மில்லியனான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 38 விளையாட்டரங்குகளுக்காக ரூபா 240,105,000 ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் 35 விளையாட்டரங்குகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த 14 விளையாட்டரங்குகளுக்காக ரூபா 127,178,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு 8 விளையாட்டரங்குகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 5 விளையாட்டரங்குகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 6,068,000 ஆன நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்து ஒரு விளையாட்டரங்கின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமிட்ட செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்கு தேவையான கால சட்டகத்தை சரியாக திட்டமிட வேண்டும். | 15 மாவட்டங்களுக்காக 52 விளையாட்டு அரங்குகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன என்பதை ஏற்றுக்கொள்வதுடன், 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 38 விளையாட்டரங்குகளில் 35 வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதாக என்பதை ஏற்றுக்கொள்வதுடன், மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 8 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் தாமதமான 5 விளையாட்டரங்குகளில் 2 விளையாட்டரங்குகளின் வேலைகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன. நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக பூர்த்தி செய்தல் தாமதமான 2 விளையாட்டரங்குகளின் வேலைகள் 2021 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. வேலைகள் ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்கள் 2021 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட உள்ளது. |

### 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 13 ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கு விளையாட்டு வீர வீராங்கனைகளுக்காக விளையாட்டு உபகரணங்கள் மற்றும் விளையாட்டு ஆடைகளைக் கொள்வனவு செய்வதற்காக 27 விளையாட்டுச் சங்களினால் மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 20 விளையாட்டு சங்கங்களுக்காக 2019 யூலை மாதம் ரூபா 25,773,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக மதிப்பீடுகளைச் சமர்ப்பிக்காத ஒரு விளையாட்டுச் சங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு பொருட்களுக்காக திணைக்களத்தினால் ரூபா 4,863,468 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 03 விளையாட்டுச் சங்கங்களுக்கும் மதிப்பீடு சமர்ப்பிக்கப்படாதிருந்த 03 விளையாட்டுச் சங்கங்களின் வீரர்கள் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றியிருந்த போதும் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் ஆடைகளைக் கொள்வனவு செய்வதற்காக நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை. 08 விளையாட்டுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 8,712,000 தொகைக்காக உரிய கொள்வனவு செய்ததாக உறுதிப்படுத்தும் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. 3 விளையாட்டுச் சங்கங்களால் விளையாட்டு உபகரணங்கள் நிர்ணயிக்கப்பட்ட அளவில் கொள்வனவு செய்யப்படாமல் இருந்ததுடன் அதன் பிரகாரம் செலவிடப்படாத ரூபா 412,794 தொகையை மீண்டும் மீள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விளையாட்டுச் சங்கங்களுக்கு உபகரணங்கள் மற்றும் நிதிகளை வழங்கும் போது குறித்த தேவைப்பாடுகள் தொடர்பாக கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நதி வழங்கப்பட்டதன் பின்னர் நிர்ணயிக்கப்பட்ட செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதா என பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் அது தொடர்பில் தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதன் மூலம் செலவினம் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட்டதா என உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறே குறித்த தரப்பினருக்கு உபகரணங்கள் மற்றும் ஆடைகள் வழங்கப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்த வேண்டும். | ක්‍රීසංදෙ/අවි/01/05/01/17 ஆம் இலக்க விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் பந்தி தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஆ) விளையாட்டுச் சங்கமொன்றுக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட ரூபா 627,000 தொகை பயிற்சி வழங்குபவரின் சம்பளத்தை கொடுப்பனவு செய்வதற்கும் விளையாட்டரங்கினை ஒதுக்குவதற்கான கட்டணங்களைச் செலுத்துவதற்கும் செலவிடப்பட்டிருந்ததுடன் மற்றுமொரு மீண்டும் விளையாட்டுச் சங்கமொன்றுக்கு வழங்கப்பட்ட ரூபா 3,700,000 தொகையில் ரூபா 2,215,528 தொகை செலவிடப்படாமல் ஓராண்டு தாமதத்தின் பின்னர் 2020 யூலை 15 ஆந் திகதி மீள தீர்வு செய்யப்பட்டிருந்தது. உப சங்கமொன்றாக செயற்படுகின்ற விளையாட்டுச் சங்கமொன்றிற்காக 2019 யூலை மாதம் வழங்கப்பட்டிருந்த ரூபா 400,000 தொகை 2019 ஆகஸ்ட் 09 ஆந் திகதி மீண்டும் திணைக்களத்திற்கு வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | நிதி வழங்கப்பட்டதன் பின்னர் குறித்துரைக்கப்பட்ட செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதா என பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | ක්‍රීසංදෙ/අවි/01/05/01/17 ஆம் இலக்க விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் பந்தி தயாரிக்கப்பட்டுள்ளது. |

### 3.4 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்குரிய 2 விடுதிகளுக்காக ஒரு இயந்திரம் ரூபா 5,290,000 என 2 மின் பிறப்பாக்கிகள் கொள்வனவு செய்வதற்கான கிரயம் ரூபா 10 மில்லியனுக்கு குறைவாக கருதி தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.14.1 ஆம் பந்தி திருத்தம் 2018 யூலை 09 ஆந் திகதி 34 ஆம் இலக்க பின்னிணைப்பின் பிரகாரம் சந்தை ஒப்பீட்டு முறைமையின் கீழ் பெறுகை செய்யப்பட்டிருந்தது. எனினும் மொத்தக் கிரயம் ரூபா 10 மில்லியனை விஞ்சிய கொள்வனவிற்காக திறந்த விலை கோரல் மேற்கொள்ளப்பட்டு தொலைபேசி விபரக்கொத்து பயன்படுத்தப்பட்டு 05 வழங்குனர்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டு கூறுவிலைக் கோரப்பட்டிருந்தன. | தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.14.1 ஆம் பந்தியின் திருத்தம் 2018 யூலை 09 ஆந் திகதி 34 ஆம் இலக்க பின்னிணைப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் அவ்வாறான செயற்திட்டங்களைச் செயற்படுத்தும் போது தேசிய போட்டி விலைகோரும் முறைமையொன்ற பின்பற்றப்பட வேண்டும். |

## 3.5 எதிர்பார்க்கப்பட்ட நலன்களைப் பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாயகடவர துன்வத்த பொது விளையாட்டரங்கின் பார்வையாளர் கூடத்தை நிர்மாணிப்பது தொடர்பில் மொத்த மதிப்பீடு ரூபா 6,000,000 ஆன போதிலும் நிர்மாணப் பணிகளுக்கான ரூபா 6,843,755 செலவிடப்பட்டிருந்தது. இங்கு நிர்மாணப்பணிகள் தொடர்பில் ரூபா 6,333,081 இற்கு ஒப்பந்தகாரர்களுடன் ஒப்பந்தம் செய்து 2017 பெப்ரவரி 19 ஆம் திகதி வேலைகள் முடிக்கப்பட வேண்டியிருந்தாலும் ஒரு 01 வருட தாமதத்தின் பின்பு அதாவது 2018 மார்ச் 31 ஆம் திகதி பணிகள் முடிக்கப்படடிருந்தன. இருந்தாலும் 2020 திசெம்பர் 15 ஆம் திகதியாகும் போது நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 02 வருடங்களும் 5 மாதங்கள் நிறைவடைந்திருப்பினும் பார்வையாளர் அரங்கு எந்தவொரு பிரிவினருக்கும் சட்டரீதியாகப் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. பார்வையாளர் மண்டபத்திலிருந்து விளையாட்டு மைதானத்தை பார்வையிட வசதியாக பார்வையாளர் கட்டிடம் விளையாட்டு மைதானத்தை முன்னோக்கி நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த செயற்திட்டம் தொடர்பில் முறையான சாத்தியவள ஆய்வு செய்யப்படாமை மற்றும் முறையான நிர்மாணிப்பு திட்டமிடப்படாமை தொடர்பில் | செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலனைப் பெறக்கூடிய வகையில் வேலை செயற்திட்ட நிர்மாணம் திட்டமிடல் மேற்கொள்ளப்பட வேண்டும். | தற்போது இந்த விளையாட்டு மைதானம் தொடர்பில் உரிய தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடாத்தி உடனடியாக பண்டுவஸ்நுவர கிழக்கு பிரதேச சபைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் நீர் மற்றும் மின்சாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கத்தை நிறைவேற்றப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | கட்டுபொத, பொல்பிடிய பொது விளையாட்டரங்கின் பார்வையாளர் மண்டபத்தினை நிர்மாணிப்பதற்கு ரூபா 6,832,450 பெறுமதிக்கு ஒப்பந்தக்காரருடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. பார்வையாளர் மண்டபத்தின் வேலைகள் 2017 மார்ச் 31 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் நிர்மாணப் பணிகளில் காணப்பட்ட பெரும் அளவிலான குறைபாடுகளுடன் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு 21 மாதங்களுக்குப் பின் அதாவது 2019 திசெம்பர் 17 ஆம் திகதி பார்வையாளர் மண்டபம் குளியாப்பிட்டிய பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது. பார்வையாளர் மண்டபத்தில் இனங்காணப்பட்ட குறைபாடுகளை மீண்டும் சரி செய்யப்பட்டதாகவும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் உறுதிச்சான்றிறொன்றை 2020 திசெம்பர் 09 ஆம் திகதி வரையிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | எதிர்பார்த்த காலத்தினுள் திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முடியுமான வகையிலும் தேவைகளை அறிந்து திட்டங்களை முறையாக தயாரித்து குறித்த கால எல்லைக்குள் குறித்த தரத்திற்கமைய நிர்மாணி வேலைகளை செய்வதற்கு முடியுமான வகையில் செயற்திட்ட முகாமை மற்றும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். | குறைபாடுகளை நிவர்த்தி செய்து தற்போது குளியாப்பிட்டிய பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிய தருகினறேன். |

## 3.6 பணம் வழங்கப்பட்டிருந்தும் செயன் முன்னேற்றம் காணப்படாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | குளியாப்பிட்டிய சுபாரத்தி வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்கு | செயற்திட்டங்கள் குறித்த நியமங்களுக்கு அமைய | 25-50 வருட காலத்திற்கு பின்பு எதிர்பார்க்கப்படாத விதத்தில் ஏற்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | உரிய மொத்த மதிப்பீட்டு நிதி ரூபா 6,535,000 ஆக இருந்ததுடன் ஒப்பந்தக்காரர்களுடன் ரூபா 5,545,525 பெறுமதிக்கு ஒப்பந்தம் செய்து ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இந்த விளையாட்டு மைதானத்திற்கு அருகைமையில் ஓடும் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதனால் விளையாட்டு மைதானத்தை சுற்றி கட்டப்பட்டிருந்த சுற்றுமதில் முற்றாக உடைந்து நிலத்தில் வீழ்ந்திருந்ததுடன் மைதானத்தின் வீதிக்குரிய பகுதியில் வேலி முற்றாக உடைந்து நிலத்தில் வீழ்ந்திருந்தது. பயன்படுத்தப்பட்டிருந்த வலை மற்றும் GI குழாய் என்பன ஏதோ ஒரு தரப்பினரால் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த நிர்மாண பணிகளின் அடிப்படை திட்டமிடலின் போது மற்றும் இடத்தெரிவின் போதும் ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் கவனத்தில் எடுக்காமை காரணமாகவும் மற்றும் ஒழுங்கான முறையில் சாத்திய வள. ஆய்வு மேற்கொள்ளப் படாமையினால் இது தொடர்பில் செலவிடப்பட்ட ரூபா 3,872,225 தொகையான பெறுமதி விளைவற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டது. | நிறைவேற்றப்படுவதுடன் நிர்மாணப் பணிகள் முகாமை மற்றும் ஒழுங்குமுறை செய்யப்பட வேண்டும். | வெள்ளப்பெருக்கு போன்ற அனர்த்த நிலமைகளினால் இதுபோன்ற நிலையொன்று ஏற்பட்டிருந்தது.<br><br>இந்த வேலி மீண்டும் சீர்செய்ய ஆரம்பிக்கப்படுவதாகவும் அந்த சந்தர்ப்பத்தில் அருகிலுள்ள இடம் ஒன்று கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதா கவும் அபிவிருத்தி வேலைகளை நிறுத்துமாறும் பாடசாலை அதிபரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | நாரம்மல மயூரபாத வித்தியாலயத்தில் பல் விளையாட்டு தொகுதியொன்றாகி விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்கு மதிப்பீட்டு தொகை ரூபா 9,800,000 ஆக இருந்தது. ஒப்பந்தக்காரருடன் 2016 ஜனவரி 06 ஆந் திகதி | தேவையை அறிந்து கொண்டு செயற்திட்டம் குறிப்பிட்ட படி திட்டமிடல் மற்றும் ஒழுங்கமைத்தல் நிறைவேற்றப்பட வேண்டியதுடன் ஒப்பந்த நிர்வாகத்தை | பல் விளையாட்டு தொகுதியில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் காரணமாக பாடசாலையின் எஞ்சிய வேலைகளை தொடர்ந்து செய்வதற்கு பிறகு வேறு கட்டிடம் நிர்மாணிப்பது |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கை மேற்கொண்டு ரூபா 8,057,370 பெறுமதிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.<br><br>இறுதிப் பட்டியலின் படி செய்யப்பட்ட வேலையின் பெறுமதி ரூபா 8,894,936 ஆக இருந்தமையால் ஒப்பந்த தொகைக்கு மேலதிகமாக ரூபா 837,566 ஐ கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. பல்விளையாட்டு தொகுதியாக வலைப்பந்து மற்றும் கூடைப்பந்து மைதானமொன்று மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் கரப்பந்து விளையாடுவதற்காக இந்த விளையாட்டு மைதானத்தை பாவிக்க முடியாதென அவதானிக்கப்பட்டது. மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட ரூபா 2,722,768 இற்கான பெறுமானமுடைய 19 வகையான வேலைகள் நிறைவேற்றப்படாததுடன் தேவைகளை அறிந்து கொண்டு சிறந்த திட்டத்துடன் வேலைத்திட்ட திட்டமிடலை செய்யாமை மற்றும் ஒழுங்கான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளாத காரணத்தினால் எதிர்பார்த்த இலக்கினை அடைந்து கொள்ள முடியாதிருந்ததனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. | ஒழுங்குமுறையாக மேற்கொள்ள வேண்டும். | தொடர்பில் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என அப்போதய அதிபரினால் அறிவிக்கப்பட்டதனால் அந்த வேலைப் பகுதி செய்யப்படவில்லை. எவ்வாறாயினும் பாடசாலை தொடர்பில் முறையான அடிப்படை திட்டமொன்று இல்லாமையே இதற்கான காரணமாகும். |
| (இ) | குருனாகல் மலியதேவ ஆண்கள் பாடசாலையில் பார்வையாளர் அரங்கினை நிர்மாணிப்பதற்கு தனியார் நிர்மாண கம்பனியொன்றுடன் ரூபா 14,296,005 பெறுமதிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. இருந்த போதிலும் அந்த நிறுவனத்தினால் | குறிப்பிட்ட கால எல்லைக்குள் செயற் திட்டத்தினை செயற்படுத்துவதற்கு முறையான வகையிலும் தேவையை அறிந்து கொண்டு திட்டத்தினை முறையாக தயாரித்து குறித்த கால | இதற்காக ரூபா 25 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனாலும் தகைமையான மனுதாரரால் முன்வைக்கப்பட்ட கேள்வித் தொகை ரூபா 12 மில்லியன் ஆக இருந்த போதும் செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | முன்வைக்கப்பட்டிருந்த விலை ரூபா 12,010,655 ஆக இருந்தது. முன் பகுதியிலிருக்கும் கதிரைகள் மற்றும் கட்டிடம் பயன்பாட்டிற்கு பெறக்கூடிய வகையில் அரங்கின் கூரையை முன் அமைத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் முன் வரிசை ஆசனங்கள் அனைத்தும் மழையிலும் வெயிலிலும் மேவுகையொன்ற இல்லாமல் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்று வதற்கு முடியுமான வகையில் பார்வையாளர் கூடத்தின் திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் செயற்திட்டத்திற்காக முறையான சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. | எல்லைக்குள் நிறை வேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். | வேண்டிய வேலை பகுதி உட்பட ரூபா 14.2 மில்லியன் தொகைக்கு வழங்கி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. பாடசாலைக்கே உரித்தான உள்ளர்ந்த நிலையை கருத்திற் கொண்டு இந்த கட்டடம் நிர்மாணிக்கப் பட்டுள்ளதாகவும் முன்பகுதி யிலுள்ள ஆதனங்கள் திறந்த ஆசனங்களாக (open tires) காணக்கூடியதாக இருந்தன. இது பொதுவாக விளையாட்டரங்கில். காணப்படுபவையாகும். |
| (ஈ) | புத்தளம் விளையாட்டு கட்டிடத் தொகுதி நிர்மாண நடவடிக்கைகளுக்குரிய உள்ளக விளையாட்டரங்கு மற்றும் பிரதான விளையாட்டு மைதானம் 400 மீட்டர் ஓட்டப்பாதை மற்றும் 25 மீட்டர் நீளமான 6 பிரிவுடைய நீச்சல் தடாகம் நிர்மாணிக்கும் வேலை தொடர்பில் 3 தனியார் நிர்மாண கம்பனிகளுடன் ரூபா 162,241,004 பெறுமதிக்கு 2012 செப்டெம்பர் 27 ஆம் திகதி மற்றும் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. இவ் ஒப்பந்தங்களின் காலம் முறையே 2018 மே 15, 2016 நவம்பர் 30 மற்றும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தன. ஒப்பந்தத்தின் படி வேலை முடிக்கப்பட வேண்டிய | - மேற்படி - | வேலை நிறைவடைந்து பல வருடங்கள் ஆன போதும் ஏற்பட்ட அரசியல் அழுத்தங்கள் காரணமாக கையேற்கும் நடவடிக்கைகள் காலதாமதமடைந்தது. ஆனாலும் தற்போது புத்தளம் நகர சபை கையேற்றுள்ளதாகவும் விளையாட்டு வீர வீராங்கணைகளின் பயன்பாட்டிற்காக முறையாக கையாளப்பட்டு மேற்பார்வை செய்யப்படுவதாகவும் தயவுடன் அறிய தருகின்றேன். |

திகதியிலும் மேலதிகமாக 05 வருடங்கள் வரை நிர்மாணப் பணிகள் நிறைவு செய்து கையளிக்கப்பட்ட தினத்திற்கும் இடையே கருத்திற் கொள்ளக்கூடிய அளவு தாமதம் அவதானிக்கப்பட்டது. வெளி நிர்மாண வேலைகள் மற்றும் 400 மீட்டர் ஓட்டப் பாதையின் மேலதிக வேலை இரண்டு நிர்மாண ஒப்பந்தங்களின் கீழ் காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (REDECO) இற்கு மொத்தம் ரூபா 23,084,184 ஒப்பந்தப் பெறுமதிக்கு 2014 செப்தெம்பர் 01 ஆம் திகதி மற்றும் 2016 செப்டெம்பர் 26 ஆம் திகதிகளில் வழங்கப்பட்டிருந்தன. அவ் வேலைகள் 2014 திசெம்பர் 15 ஆந் திகதி மற்றும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதிகளில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதும் 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலதாமதத்துடன் 2019 மார்ச் 23 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தது. முழு நிர்மாணப் பணிகளுக்கும் ஒப்பந்தத்தின்படி இணங்கப்பட்ட மொத்த ஒப்பந்தப் பெறுமதியை மிகைத்து ரூபா 79,727,399 ஆன குறிப்பிடத்தக்க மேலதிக வேலைகள் மற்றும் அளவீட்டு விலகல் காணப்படுவதன் காரணமாக ரூபா 205,304,705 தொகையான மொத்த மதிப்பீட்டு பெறுமதி ரூபா 285,032,104 வரை திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தன. அதன்படி 2020 திசெம்பர் 31 ஆந் திகதி ஆகும் போது ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த மொத்த தொகை ரூபா 276,560,406 (வரி நீங்கலாக) ஆகும். நிர்மாணப் பணிகள் நிறைவு செய்த பிறகு

நிர்மாணப் பணிகளில் பல குறைபாடுகள் காணப்பட்டதுடன் அவை சரி செய்யப்பட்டு பல வருடங்கள் ஆகியும் விளையாட்டு கட்டிடத்தொகுதி உபயோகத்திற்கு எடுக்கப்படாமல் பயனின்றி இருந்ததுடன் 2019 மார்ச் 22 ஆந் திகதி இந்த விளையாட்டு கட்டிடத்தொகுதி புத்தளம் நகரசபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது.
இதன்படி இந்த வேலைதிட்டம் தொடர்பில் ஒழுங்கான முறையில் சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் செயற்திட்டத்தை திட்டமிடுதல், நிர்மாணித்தல் மற்றும் பாவனைக்கு எடுத்தல் தொடர்பில் முறையான செயற்திட்ட முகாமைத்துவம் ஒன்று இடம்பெற்று இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விளையாட்டு திறமை பயிற்சி செயற்திட்டத்திற்காக ரூபா 9,266,400 ஆன 1872 இலகு மிசைல் விளையாட்டு உபகரணங்கள் அலகுகள் அரசின் பெறுகை வழிகாட்டல் பின்பற்றப்படாமல் தனியார் விளையாட்டுப் பொருட்கள் வழங்கும் நிறுவனமொன்றிடமிருந்து கட்டளயிடப்பட்டு 2017 யூலை 05 ஆந் திகதி களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தது. இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இனங்காணப்பாடமல் இருந்ததுடன் 2½ ஆண்டுகள் களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு 2020 திசெம்பர் 30 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் இருந்த இப்பொருட்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பெறுகையில் இடம் பெற்ற தவறுகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாக பொறுப்பான தரப்பினரை இனங்காணப்பதற்காக முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளல் மற்றும் அது தொடர்பாக தொடர் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் மேலதிக செயலாளால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வின் பேரில் குறித்த இலகு மிசைல் இருப்பினை மீண்டும் வழங்குனர் நிறுவனத்திற்கு அனுப்புவதற்காக அமைச்சின் செயலாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 ஆண்டு நிகழ்ச்சிநிரல் தொடர்பாக இணையத்தளத்திலும் உரிய சுற்றறிக்கை மூலமும் திணைக்களம் அறிவூட்டப்பட்டிருந்ததுடன் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் இலக்கை சீராக்குவது தொடர்பாக வரைவொன்றை தயாரித்து நிலைபேறான அபிவிருத்தி சபைக்கு அமைச்சின் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களைச் செயற்படுத்துவது தொடர்பாக அக்கரை செலுத்தும் தரப்பினராக விளையாட்டு அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள், நிலைபேறான அபிவிருத்தி சபை, வியைாட்டு வீர வீராங்கணைகள், பொது மக்கள் இனங்காணப் பட்டிருந்தனர். அவ்வாறே நிலைபேறான அபிவிருத்தி இலக்கு நிறுவனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவதற்காக தயார்படுத்தல் தொடர்பாக பொது திட்டங்களைத் தயாரித்தல் ஊடாக அதற்காக தயார்படுத்தபப்ட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான நோக்கங்களை நேரடியாக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பான செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | அரச பாதீட்டின் மூலம் வருடாந்தம் போதியளவு நிதிஏற்பாடு பெற்றுக்கொள்ள முடியாமை மற்றும் போதியளவு கட்டுநிதி கிடைக்காமை காரணமாக நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை அடைந்து கொள்ள தடைகள் ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்காக தயார்படுத்தல் மற்றும் செயற்படுத்துவது தொடர்பான நிதி முகாமைத்துவம் செயற்திறனாக மேற்கொள்ளப்பட வேண்டும். | இணங்குகின்றேன். |

## 5 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி வரை 04 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் திணைக்களத்தின் செயலாற்றலுக்காக அதிகளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் இவ்வெற்றிடங்கள் அநேகமாக காலமாக இருந்து வருவது அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அத்தியவசிய சேவைகளை உடனடியாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பணிப்பாளர் (நிர்வாகம்) பதவிக்காக 2020.01.20 ஆந் திகதியும் பொறியியலாளர் பதவிக்காக 2020.10.12 ஆந் திகதி உத்தியோகத்தரொருவர் அறிக்கையிட்டிருந்தார். கணக்காளர் பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2018 ஆம் ஆண்டிலிருந்து பொது நிர்வாக அமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | விளையாட்டுக்கள் மற்றும் தொடர்புடைய 7 பதவிகளுக்காக பதவியணியில் 38 வெற்றிடங்கள் காணப்பட்டன. 02 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேற்பட்ட காலமாக துறையுடன் தொடர்பான வெற்றிடங்களுக்காக பதவியணியினர் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக திணைக்களம் விளையாட்டு அபிவிருத்தி செயற்பாடுகளின் செயலாற்றல் தொடர்பில் பாதகமாக தாக்கமளிக்குமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | விளையாட்டுத் துறையில் செயலாற்றலுக்கு தாக்கமளிக்கும் இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விளையாட்டு பயிற்றுவிப்பாளர் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதறகாக விண்ணப்பங்கள் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. விளையாட்டு உத்தியோகத்தர்கள் பயிற்றுவிப்பாளர் பதவிக்கு பதவி உயர்வு பெற்றதன் பின்னர் ஏற்படும் வெற்றிடங்களுடன் புதிய விளையாட்டு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிர்வாகம் மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பாக 09 பதவிகளில் பதவியணி வெற்றிடங்கள் 47 காணப்பட்டதுடன் 01-07 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக இருந்து இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடனடியாக அத்தியவசிய வெற்றிடங்களைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | உத்தியோகத்தர்கள் இடமாற்றம் காரணமாக வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதால் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை பதவிகளுக்காக வெற்றிடங்கள் காணப்பட்டன. |